**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 44/2024 |
| P.W. | : 1 |
| Name | : திரு. செல்வராஜ் |
| Father Name | : திரு. ரங்கநாயக்கர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் கோவை சரவணம்பட்டியில் குடியிருந்து நிலத்தரகராக இருந்து வருகிறேன். இறந்துபோன சுப்பிரமணி என்னுடைய அண்ணன். 14-11-2020 அன்று தீபாவளி அன்று மேற்படி சுப்பிரமணி மதியம் 2 மணி அளவில் என் வீட்டிற்கு வந்தார். பணம் ரூ.500 என்னிடம் கேட்டார் நான் கொடுத்தேன். 4 மணிக்கு அவர் புளியம்பட்டி போவதாக சென்றுவிட்டார். மறுநாள் காலை 8 அல்லது 9 மணி அளவில் எனக்கு

போன் வந்தது. எனது அண்ணன் புளியம்பட்டி அருகில் காலமாகிவிட்டார் என்று தகவல் சொன்னார்கள். இது குறித்து நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என் அண்ணனை யாரோ அடித்துக் கொன்றுவிட்டார்கள் என்று புகாரில் சொன்னேன். அவருக்கு தாடையிலும், கையிலும், வயிற்றிலும் காயமேற்பட்டிருந்தது. மூக்கு மற்றும் வாயில் ரத்தம் வந்திருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் என்னால் கொடுக்கப்பட்டது. **புகார் அ.சா-ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அண்ணன் சுப்பிரமணியத்திற்கு சிறுவயது முதல் அவர் காலமாகும் நாள்வரை குடிப்பழக்கம் இருந்தது என்றால் சரிதான். என் அண்ணன் பாச்சாமல்லனூரில் உள்ள தோட்டத்தில்தான் அவர் குடியிருந்தார் என்றால் சரிதான். எனக்கு போலீசார் வரச்சொல்லி போன் செய்தார்களா என்றால் இல்லை என் அக்கா தான் போன் செய்தார். என் சகோதரி கஸ்தூரி தான் எனக்கு போன் செய்து வரச்சொன்னார் என்று நான் போலீசாரிடம்கொடுத்த புகாரிலோ, போலீசார் விசாரிக்கும்போதோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கோவையிலிருந்து புளியம்பட்டி வந்து போலீசாருடன் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை புளியம்பட்டியிலிருந்து நேராக சம்பவ இடத்திற்கு சென்றேன். பின்பு தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். எப்போது போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் நான் வருவதற்கு முன்பாகவே ஒருமுறை போலீசார் வந்ததாக கேள்விப்பட்டேன். மறுபடியும் போலீசார் வந்தார்கள். என் அண்ணன் அணிந்திருந்த உடைகளை வைத்து அவர்தான் என்று அடையாளம் காண்பித்தேனா

என்றால் அவரை நேரடியாகப் பார்த்து அடையாளம் காண்பித்தேன். உடைகளை போலீசார் எடுத்துச்சென்றார்களா என்றால் சட்டை மட்டும் தான் அணிந்திருந்தார் வேறு உடைகள் அணிந்திருக்கவில்லை. போலீசார் நான் புகார் கொடுத்த பின்னிட்டு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் அதற்கு பிறகு எப்போதாவது வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது நான் அங்கு செல்லவில்லை. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது பொதுமக்கள் அதிகமாக இருந்தார்கள் என்றால் ஆமாம். நான் போகும்போதும் பொதுமக்கள் இருந்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் அங்கு இருந்த பொதுமக்களிடம் கையெழுத்து பெற்றார்களா என்றால் தெரியாது. சாட்சி முருகேசன் மகன் சரவணக்குமார் எனது அக்கா மகன். அவர் என்னுடன் வந்திருந்தாரா என்றால் என்னுடன் வரவில்லை.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் வழக்கு சம்பந்தமாக எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் சுமார் 30 முறை விசாரித்திருப்பார்கள். நான் தற்போது சொன்னவாறு தான் 30 முறையும் போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். என் அண்ணனுக்கு உள்ளாடை அணியும் பழக்கம் இருந்ததா என்றால் ஆமாம். என் அண்ணனுக்கு உள்ளாடை அணியும் பழக்கம் உள்ளது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். என் அண்ணன் வீட்டிற்கு வந்த சமயம் மேலாடை அணிந்திருந்தார் என்றால் சரிதான். என் அண்ணன் அணிந்திருந்த வேஷ்டி மற்றும் உள்ளாடைகளை என்னிடம் போலீசார் காண்பித்தார்களா என்றால் இல்லை. புளியம்பட்டியை சுற்றி எங்களது உறவினர்கள் உள்ளார்களா என்றால் ஆமாம். அவர்கள் புகார் எதுவும் கொடுக்ககவில்லை என்றால் ஆமாம். என்

அண்ணனுக்கு சொத்து சம்பந்தமாக தனிப்பட்ட எதிரிகள் உள்ளார்கள் என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 44/2024 |
| P.W. | : 2 |
| Name | : திரு. வனிதாமணி |
| Father Name | : திரு. நாகராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2025.

எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் நம்பியூர் வேம்பாண்டம்பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா. இறந்துபோன சுப்பிரமணி எனது தகப்பனார். 15-11-2020 ல் என் தகப்பனார் காக்காச்சிபாறையில் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். அவருக்கு மூக்கிலும்,

காதிலும் ரத்தம் வந்திருந்தது. முகவாய்கட்டையில் காயம் இருந்தது. இடதுகையில் தீக்காயம் ஏற்பட்டிருந்தது. அவர் உடலில் சட்டை மட்டும் அணிந்திருந்தார். பட்டன்கள் கழற்றப்பட்டு இருந்தது. உள்ளாடையும், வேட்டியும் இருக்கவில்லை. அவர் அணிந்திருந்த காலணிகள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தது. அவர் வைத்திருந்த செல் மற்றும் சிம்கார்டு அவரிடம் இருக்கவில்லை. வாட்ச் அணிந்திருப்பார் அதுவும் இருக்கவில்லை. போலீசாரிடம் இறந்துபோனது எனது தகப்பனார் என்று அடையாளம் காண்பித்தேன். போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்டார்கள் நான் சாட்சியாக இருந்தேன். என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தகப்பனாரின் இடதுகையில் தீக்காயம் இருந்ததாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால்சொன்னேன் போலீசார் எழுதவில்லை மாற்றி மாற்றி எழுதியுள்ளார்கள். சிதறி கிடந்ததாக கூறும் செருப்புகளை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் நான் எடுத்துக்கொடுத்தேன். செருப்புகள் கிடந்ததாக போலீசாரிடம் சொன்னேனா என்றால் ஆமாம் ஆனால் அவர்கள் எழுதவில்லை. என்னுடைய அப்பாவின் போன் நெம்பர் தெரியுமா என்றால் கடைசி 2 நம்பர்கள் தெரியும் மற்றவை தெரியவில்லை. மேற்படி சிம்கார்டும், செல்-ம் என்ன ஆனது என்று போலீசார் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என்றால் ஆமாம். என் தகப்பனார் என்ன கம்பெனி வாட்ச் அணிந்திருந்தார் என்றால் சிட்டிசன். அதையும் போலீசார் கண்டுபிடிக்கவில்லை என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், போலீசார் அங்கு வந்து பிரேத விசாரணை என் முன்பு செய்ததாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் சிறுவயதிலிருக்கும்போதிருந்தே என் தகப்பனார்

குடிபழக்கம் வைத்திருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் அதிகமாக குடித்து குடிபோதையில் கீழே விழுந்து கிடந்ததால் மரணமடைந்துவிட்டார் என்றும், என் சித்தப்பா பொய்யான ஒரு புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசாரிடமும் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். மொத்தமாக எத்தனை முறை எத்தனை அதிகாரிகள் விசாரித்தார்கள் என்றால் 4, 5 அதிகாரிகள் விசாரித்தார்கள். ஒரு பெண் அதிகாரி, மற்றவர்கள் ஆண் அதிகாரிகள். அத்தனை அதிகாரிகளும் எனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்களா என்றால் இல்லை ஒரு அதிகாரி மட்டும் தான் பதிவு செய்தார். ஒரு அதிகாரி பதிவு செய்த வாக்குமூலம் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**